நரேன் கணபதி ஏற்பாட்டில் – துணை முதல்வர் –

# உதயநிதி ஸ்டாலின் - உதயநாள் விழா பொதுக்கூட்டம்!

## பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை! காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

சென்னை, டிச. 23 -

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, இளைஞர் அணி நரேன் கணபதி ஏற்பாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதய நாள் விழா தெரு முனைக் கூட்டம் 21.12.2024 அன்று காரம்பாக்கம் சுபம் காம்ப்ளக்ஸ் அருகில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் திராவிட இயக்க தமிழர் பேரவை - தலைவர் சுப.வீரபாண்டியன், தலைமை கழக பேச்சாளர் கா. காயத்ரி, காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ., மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர், ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ.., ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்நிகழ்ச்சியில் திருமதி.ஹேமலதா கணபதி எம்.சி., வட்டக் கழக செயலாளர் சி.சுந்தர் ஆகியோர் வரவேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் ச.சங்கர் கணேஷ்,எம்.சி., செ.ரவி, க.கைலாசம், இரா.ராஜேந்திரன், வட்ட நிர்வாகிகள் மு.ஆறுமுகம், எல்.அருள், ஆர்.எஸ்.தில்லைவாணன், ஆர்.லதா, இ.ஜெயவேல், இரா.ரமேஷ், இரா.சீனிவாசன், கே. ராமதாஸ், வி. ஜெகன்நாதன், ஜி.சீனி வாசன், ஆர்.தியாகராஜன், ஆர்.வினோத், எம்.கிரி (எ) கணேசன், பா.தனசேகர், மா.ஜெகன், கே.மூர்த்தி, என்.விவேக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, எஸ். அருணாச்சலம், வ.செல்வகுமார், , மாவட்ட அமைப்பாளர்கள் வி.ராஜேஷ், எஸ்.பி.அருள், பகுதி கழக நிர்வாகிகள் பி.எம்.செல்வராஜ், இரா.பால்பாண்டியன், எஸ்.பாரதி, கே.ராஜி, எஸ்.ரமேஷ்ராஜ், த.ரமேஷ், அ.மோசஸ், தி.சார்லஸ், ஏ.செல்வம், செல்வி ரமேஷ், சாந்தி ராமலிங்கம்,

மா.பா.சித்ராலயம், ஜே. ஏ.துரை, நா.அப்துல்கபூர், அ.கவுஸ்பாஷா, ஏ.ராகேஷ், எஸ்.சண்முகசுந்தரம், எம். செல்வதுரை, எஸ்.நித்தியானந்தம், கே.கந்தசாமி, ஆர். .கோவிந்தசாமி, எல்.ஜனார்த்தனன், கே.முருகன், பெ.ஞானம், தி.குமரவேல், இ.முனுசாமி, ஏ.தமிம்ஷா, வி.சுரேஷ், டி.லோகேஷ், ஏ.சுமன், ஜே.வேல்பாண்டியன், சி.ராஜேஷ், ஆர். பிரேம்குமார், எல்.தானவேல், கே.விக்ரம், எம்.சரவணன், எம். மகேஸ்வரி, ஏ.பிரேமா, ஏ.ஆனந்த், வி. மணிகண்டன், ச.கதிரவன், எம்.அமுல்ராஜ், சி.பாலமுருகன், எஸ்.சிவராமகிரு ஷ்ணன், ஆர்.கார்த்திக்ராஜ், எஸ்.தினேஷ், எஸ்.எம்.அரவிந்த் பாலாஜி, எஸ்.பாஸ்கரன், பி.கே.எம்.அப்பு (எ) வினோத், டி.நரேஷ், எஸ். வினோத்குமார், சதீஷ்குமார், டி.ராஜேஷ், எஸ். தினேஷ்குமார், வட்டகுழு உறுப்பினர்கள், பாக முகவர்கள் கி.ஜெயவேல், ஆ. பழனி, சு.நாகராஜன், கே. தமிழழகன், எஸ்.லட்சுமணன், ஆர்.ஜெயமுருகன், ஜி.கோபிநாத், எஸ்.பிரகாஷ், சி.குப்புசாமி, எம். கனிமொழி, ஏ.விஸ்வநாதன், ஏ.ராகுல்கணேஷ், எஸ்.குருசாமி, பி.ஹரி, கே. அன்பு, ஜி.வி.ராஜ்குமார், கே.ரேவதி மற்றும் வட்டக் கழக செயல்வீரர்கள், பாக நிலை உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக முன்னோடிகள், கழகத் தோழர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இளைஞர் அணி பகுதி துணை அமைப்பாளர்கள் டி.ராஜேஷ், இரா.பா.உதயகுமார் ஆகியோர் நன்றியுரையாற்றினர்.

---

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; வாக்குச்சாவடி மையங்களில் பதிவான சி.சி.டி.வி. காட்சிகள் உள்ளிட்ட மின்னணு ஆவணத்தை ஆய்வு செய்யத் தடை விதித்து, வெளிப்படைத் தன்மையை நீக்கி, ஒன்றிய பா.ஜ.க. அரசு, தேர்தல் விதியில் திருத்தம் கொண்டுவந்து விட்டார்களாமே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி; ஒளிவு மறைவற்ற வெளிப்படைத் தன்மையைத் தவிர்த்து வெறுப்பவர்கள், இருளை நேசிப்பவர்கள்; அனைத்தையும் இருட்டிலேயே முடித்துச் சாதித்துவிட முனைபவர்கள்.**

**ஜனநாயகத்தின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று வெளிப்படைத்தன்மை. வெளிப்படைத்தன்மை இல்லை என்றால், ஏதோ சூது இருக்கிறது என்று பொருள். ஒளியிலேதான் ஜனநாயகம் மிளிரும்; இருளில் அல்ல.**

**“கயமை புரியும் ஒவ்வொருவரும் ஒளியை வெறுப்பர்” என்பது ஏசுநாதரின் வாக்கு !**

---

நாடாளுமன்றக் கூட்டத் தொடரில்

# தி.மு.க. எம்.பி.க்களின் கேள்விகளால் திக்கித் திணறி நின்ற ஒன்றிய அரசு!

## ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்சனம்!

சென்னை, டிச.23-

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடரில் தி.மு.க. எம்.பி.களின் கேள்விகளால் திக்கித் திணறி நின்ற ஒன்றிய அரசு என்று ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் விமர்ச்சித்துள்ளது.

இது குறித்து 22.12.2024 தேதிய தினகரன் நாளேடு தலையங்கத்தில் கூறியிருப்பதாவது:-



தினகரன்

டிசம்பர் 22, 2024 ஞாயிற்றுக்கிழமை

தட்டி எழுப்பிய குரல்கள்

நாடாளுமன்றத்தின் நடப்பாண்டுக்கான குளிர்கால கூட்டத்தொடர் கடந்த நவம்பர் மாதம் 25ம்தேதி தொடங்கியது. நேற்று முன்தினம் (டிசம்பர் 20) வரை நடந்தது. கூட்டத்தொடர் தொடங்குவதற்கு முன்பே, அவையை சுமூகமாக நடத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று ஆளும் ஒன்றிய அரசு, எதிர்க்கட்சிகளுக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது. கூட்டத்தொடரில் தான் சார்ந்த கட்சியின் முகமாக தீட்டி வைத்திருந்த அஜென்டாக்களை நிறைவேற்றி விடவேண்டும் என்பதில் மட்டுமே முனைப்பாக இருந்தது ஒன்றிய அரசு.

ஆனால் இதைபொருட்படுத்தாமல் ஒட்டுமொத்த ஜனநாயகத்தின் குரலாக அவையில் ஓங்கி ஒலித்தனர் எதிர்க்கட்சி எம்.பி.க்கள். ‘ஒரே நாடு ஒரே தேர்தல், வக்புவாரிய மசோதா, மகாராஷ்டிரா, ஜார்க்கண்ட் சட்டப்பேரவை தேர்தல், சட்டப்பிரிவு 370 நீக்கம், மணிப்பூரில் மீண்டும் வெடித்திருக்கும் கலவரம், அதானி விவகாரம்” என்று எதிர்க்கட்சிகள் எழுப்பிய கேள்விகளுக்கு எல்லாம் திக்கித்திணறி நின்றது ஒன்றிய அரசு. இதே போல் சட்டமேதை அம்பேத்கர் குறித்த உள்துறை அமைச்சர் அமித்ஷாவின் சர்ச்சை பேச்சு, துணை ஜனாதிபதி மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் என்று அனைத்தும் மக்கள் மன்றத்தில் பரவலாக பேசப்பட்டது.

இது ஒருபுறமிருக்க, நடந்து முடிந்த குளிர்கால கூட்டத்தொடரில் ஒட்டு மொத்த இந்தியாவின் கவனத்தையும் ஈர்த்தவர்கள் நமது தமிழ்நிலத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது இங்கே பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்று. அதாவது மக்களவையானது 54.5 சதவீதமும், மாநிலங்களவை 40 சதவீதமும் தான் இயங்கியது என்று நாடாளுமன்ற விவகாரத் துறை தகவல் தெரிவித்துள்ளது. இந்தவகையில் பல்வேறு களேபரங்கள் நடந்த சூழலிலும் ஒவ்வொரு தி.மு.க. உறுப்பினரும் மக்களின் உரிமைக்குரலாய் ஒலித்துள்ளனர்.

“ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து திமுக மக்களவை குழுத்தலைவர் டி.ஆர்.பாலு, மதுரை டங்ஸ்டன் சுரங்க அனுமதி ரத்து குறித்து நாடாளுமன்ற குழுத்தலைவர் கனிமொழி, அவைக்கு பிரதமரே வருவதில்லை என்பதை சுட்டிக்காட்டி திருச்சி சிவா, கேசவானந்தபாரதி வழக்கு என்று அரசியல் சட்ட நுணுக்கத்துடன் ஆ.ராசா, மாநில உரிமைகள், மதவாத அரசியல் குறித்து ஜெகத்ரட்சகன், வானிலை அறிவிப்பு தொழில்நுட்ப மேம்பாடு குறித்து தயாநிதி மாறன்,” என்று ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதத்தில் பேசி ஒன்றிய அரசை தட்டி எழுப்பினர்,” என்று பெருமிதம் தெரிவித்துள்ளார் நமது முதல்வர்.

2024 நாடாளுமன்றத்தேர்தல் முடிவுகளுக்கு பிறகு ஆளும் கட்சியை விட, எதிர்க் கட்சிகளின் செயல்பாடுகளை மக்கள் கூர்ந்து நோக்குகின்றனர். அதிலும் குறிப்பாக தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் பாணியில், அனைத்து எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குரல் எழுப்ப ஆரம்பித்துள்ளனர். நமது மாநிலத்தின் உறுப்பினர்கள் முன்வைக்கும் பிரச்சினைகள் மற்றும் அதற்கான தீர்வுகள், கோரிக்கைகள் என்பது நாட்டுக்கே தேவையான ஒன்றாக உள்ளது. இதன்காரணமாகவே மற்ற மாநிலங்களின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இவர்கள் முன்னோடிகளாக திகழ்கின்றனர்.

நாற்பதுக்கு நாற்பது என்றொரு தேர்தல் வெற்றி கிடைத்தது. இவர்கள் நாடாளுமன்றத்திற்கு சென்று என்ன செய்யப்போகிறார்கள்? என்று சிலர் கேள்வி எழுப்பினர். ஆனால் அவர்கள் எல்லாம் வாயடைத்துப் போகும் வகையில் திராவிட முன்னேற்றகழக நாடாளுமன்ற உறுப்பினர்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளது என்று பதிலடி ஒன்றையும் முதல்வர் பதிவு செய்துள்ளார்.

அதே நேரத்தில் தமிழகத்து மண்ணில் இருந்து நாடாளுமன்றத்திற்கு சென்றுள்ள இவர்கள் அனைவரும் கலைஞர் வளர்த்தெடுத்து அனுப்பி வைக்கப்பட்ட திராவிட ஆற்றலாளர்கள் என்பதையும் கோடிட்டு காட்டி அவர்களின் தனித்துவத்தையும் உணர்த்தியுள்ளார் முதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி காமராஜர் நகர் பகுதியில் அமைந்துள்ள டி.எஸ்.செல்வம் பள்ளியில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கி கிறிஸ்துமஸ் கொண்டாடினார். உடன் மாநகர பொறுப்பாளர் சன் பிரகாஷ், பகுதி செயலாளர் ஜி.நாராயண பிரசாத், பள்ளி தாளாளர் செல்வம், ஆவடி லயன்ஸ் கிளப் தலைவர் ராகுல் போரா, ஆனந்த் ,பள்ளி நிர்வாகிகள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

---


சென்னைத் தெற்கில் ஒரு மாதம் முழுவதும்

“உதயநிதியின் உதயநாள்” விழா

364 சொற்பொழிவாளர்கள் பங்கேற்கும்

182 பிறந்தநாள் கூட்டங்களின் “இன்றைய நிகழ்ச்சிகள்”



23.12.2024 - திங்கட்கிழமை

| வ.எண் | சொற்பொழிவாளர்கள் | இடம் | தலைமை |
|---|---|---|---|
| 1. | குடியாத்தம் பாரி<br>மா.ஜ.சந்தீப் | 140 அ வட்டம் – ரெட்டிகுப்பம் சாலை, காமாட்சி அம்மன் கோயில் அருகில், சைதாப்பேட்டை மேற்கு பகுதி. | சைதை ஆர்.ரவி<br>மாவட்ட பிரதிநிதி |
| 2. | மதிவதனி<br>ஜா.முகமது ஜாபீர் | 129 அ வட்டம் – தசரதபுரம் பேருந்து நிலையம், கலைஞர்நகர் வடக்கு பகுதி, விருகம்பாக்கம். | ச.ரா.சீனிவாசன்<br>மாவட்ட பிரதிநிதி |
| 3. | ஆம்பூர் பொய்யாமொழி<br>ஷேக் அலிமாஸ் அலி | 177 அ வட்டம் – தண்டீஸ்வரம் பிரதான சாலை, லதா சூப்பர் மார்கெட் அருகில், வேளச்சேரி மேற்கு பகுதி. | க.ராகுல்குமார்<br>வேளச்சேரி (மே) ப.இளைஞர்அணி |
| 4. | திருச்சி ராதாகிருஷ்ணன்<br>எபினாமேரி | 188 அ வட்டம் – மயிலை பாலாஜி நகர் முதல் பகுதி, சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி. | மா.ப.சத்தியசீலன்<br>வட்ட துணை செயலாளர் |
| 5. | இளையராஜா<br>மு.முகினா | 154 வட்டம் – நாயுடு தெரு, இராமாபுரம், மதுரவாயல் தெற்கு பகுதி | வ.செல்வகுமார் MC<br>பொதுக்குழு உறுப்பினர் |
| 6. | அணவயல் கணேசன்<br>நா.பாசித்தா பானு | 169 அ வட்டம் – ஜோதியம்மாள் நகர், சைதாப்பேட்டை கிழக்கு பகுதி | மு.பாக்கியலட்சுமி<br>பகுதி துணைச் செயலாளர் |

AK DIGITAL PRINTING 9444129952

மேற்கண்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு சிறப்பிப்போர் :

மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள் தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநில அளவிலான அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழகச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்கள். எனவே கழகத் தோழர்கள் பெருந்திரளாக இந்நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

அன்புடன் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் B.A., LL.B.,
மாவட்ட கழக செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.